بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علیٰ رسوله الکریم وعلیٰ عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

இதழ் 6

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

01 ஜமாதிஸ் ஸானி 1440 ஹிஜ்ரி கமரி 07 தப்லீக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
07 பிப்ரவரி 2019


## அல்லாஹ்வின் கட்டளை

تُوْلِجُ الَّيْلَ فِي النَّهَارِ وَتُوْلِجُ النَّهَارَ فِي الَّيْلِ ۡ وَتُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَتُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ ۡ وَتَرْزُقُ مَنْ تَشَآءُ بِغَيْرِ حِسَابٍ ○

நீ இரவை பகலில் நுழையச் செய்கின்றாய். மேலும், பகலை இரவில் நுழையச் செய்கின்றாய். உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகின்றாய். மேலும், உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகின்றாய். மேலும் நீ விரும்புவோருக்கு அளவின்றி வழங்குகின்றாய். (3:28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஆன்மா நீண்ட ஆயுளுக்கான வாக்குறுதியை தருகின்றது. இது ஏமாற்றுதலாகும். வயதின் மீது எந்த நம்பிக்கையும் கிடையாது விரைவாக நேர்மையின் பக்கமும் இறைவணக்கத்தின் பக்கமும் குனிய வேண்டும். மேலும் காலை முதல் மாலை வரை நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்**

**தஹஜ்ஜுதிற்கு குறிப்பாக எழுங்கள். மேலும் உருக்கத்துடனும் ஆர்வத்துடனும் அதனை நிறைவேற்றுங்கள். நடுத்தொழுகையில் வேலையின் காரணமாக சோதனை வந்து விடுகின்றது**

**எந்த மக்கள் உண்மைக்காகத் துன்பங்களையும், இழப்பையும் மேற்கொள்கின்றார்களோ அவர்கள் மக்களது பார்வையில் விருப்பமானவர்களாக இருக்கின்றனர். மேலும் இது நபிமார்கள் மற்றும் உண்மையாளர்களின் பணியாகும்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### பெயரளவிலான பைஅத் எந்த பயனையும் தராது

பெயரளவிலான பைஅத் எந்த பயனையும் தராது. இத்தகைய பைஅத்தில் பங்குபெற்றிருப்பது கஷ்டமாகும். எப்போது வரை தனது இருப்பை விட்டு விட்டு முழுமையான அன்புடனும், கலப்பற்ற தன்மையுடனும் அவனுடன் இணைந்து விடும் போதுதான் அதற்குரிய பங்கு கிடைக்கும். நயவஞ்சகர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் உண்மையான தொடர்பை வைத்திருக்காததினால் அவர்கள் இறுதியில் ஈமானற்றவர்களாக இருந்தார்கள். அவர்களிடம் உண்மையான அன்பும், கலப்பற்றத் தன்மையும் உருவாகவில்லை.

எனவே அவர்கள் வெளிப்படையாக لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்று கூறியது எதற்கும் உதவவில்லை. எனவே இந்த தொடர்பை அதிகரிக்கச் செய்வது மிகவும் அவசியமாகும். இந்த தொடர்பை ஒருவர் அதிகரிக்கச் செய்யவில்லை என்றால் மேலும் அதற்காக அவர் முயற்சி செய்யவில்லை என்றால் அவரது சந்தேகமும், அவரது வருத்தமும் எவ்வித பயனையும் தராது.

அன்பு மற்றும் கலப்பற்றத் தன்மையின் தொடர்பை அதிகரிக்க வேண்டும். உங்களால் இயன்ற அளவு நீங்கள் பின்பற்றக்கூடியவரின் வழிமுறைகள் மற்றும் கொள்கைகளின் நிறத்தை உங்களிடத்தில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆன்மா நீண்ட ஆயுளுக்கான வாக்குறுதியை தருகின்றது. இது ஏமாற்றுதலாகும். வயதின் மீது எந்த உறுதியும் கிடையாது. விரைவாக நேர்மையின் பக்கமும் இறைவணக்கத்தின் பக்கமும் குனிய வேண்டும். மேலும் காலை முதல் மாலை வரை நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

### தஹஜ்ஜுத் தொழுகையை பேண வேண்டும்

இந்த வாழ்க்கையின் முழு மூச்சும் உலகப் பணிகளிலேயே கழிந்து விட்டால் மறுமைக்காக எதனை அவர் சேமித்து வைத்துள்ளார்?

தஹஜ்ஜுதிற்குக் குறிப்பாக எழுங்கள். மேலும் உருக்கத்துடனும் ஆர்வத்துடன் அதனை நிறைவேற்றுங்கள். நடுத்தொழுகையில் வேலையின் காரணமாக சோதனை வந்து விடுகின்றது. அல்லாஹ் பரிபாலிக்கக் கூடியவனாக இருக்கின்றான். தொழுகையை குறித்த நேரத்தில் தொழ வேண்டும். லுஹர் மற்றும் அஸர் தொழுகைகள் எப்போது வேண்டுமானால் சேர்த்து தொழப்படலாம். மக்கள் பலவீனமானவர்கள் என்பதை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான். எனவே இந்த வாய்ப்பை அவன் வைத்துள்ளான். ஆனால் இந்த வாய்ப்பினால் மூன்றை ஒன்றாக ஜம்மு செய்ய முடியாது.

### அல்லாஹ்விற்காக துன்பத்தை மேற்கொள்ளுதல்

வேலை மற்றும் இதர காரியங்களின் மூழ்கியிருக்கும் மனிதர்கள் தண்டனை பெறுகின்றார்கள். (மேலும் ஆட்சியாளர்களின் கோபத்திற்கு ஆளாகின்றனர்). பிறகு அல்லாஹ்விற்காக துன்பத்தை மேற்கொள்ளும்போது அது எவ்வளவு சிறந்ததாக இருக்கும். எந்த மக்கள் உண்மைக்காக துன்பங்களையும், இழப்பையும் மேற்கொள்கின்றார்களோ அவர்கள் மக்களது பார்வையில் விருப்பமானவர்களாக இருக்கின்றனர். மேலும் இது நபிமார்கள் மற்றும் உண்மையாளர்களின் பணியாகும். ஒரு நபர் அல்லாஹ்விற்காக உலகத்தில் இழப்பை மேற்கொள்வார் என்றால், அல்லாஹ் ஒருபோதும் அதற்குரிய ஈட்டை வழங்காமல் வைப்பதில்லை. முழுமையாக அதற்குரிய கூலியை வழங்குகின்றான்.

### மனிதன் நயவஞ்சகத் தன்மையை மேற்கொள்ளக்கூடாது

மனிதன் நயவஞ்சகத் தன்மையை மேற்கொள்ளக்கூடாது. உதாரணமாக, ஓர் இந்து அவர் ஆட்சியாளராகவோ அல்லது பொறுப்பாளராகவோ இருக்கின்றார். அவர், ராமும் ரஹீமும் ஒருவரே என்று கூறினால் அத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் அவருடைய கூற்றிற்கு ஆமாம் போடக்கூடாது. அல்லாஹ் சரியான பதிலைக்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**வருடத்தின் உண்மையன வாழ்த்துச் செய்தி என்னவென்றால், நாம் ஓர் உறுதி எடுக்க வேண்டும். நமக்கு இறைவன் இன்னொரு வருடத்தினைக் காட்டித் தந்துள்ளான். இன்னொரு வருடத்தில் நம்மை நுழையச் செய்துள்ளான். இதில் நாம் நமக்குள் இருந்த பலவீனங்களையும் இருள்களையும் அகற்ற முயற்சி செய்ய வேண்டும். கடந்த வருடத்தில் ஏற்பட்ட பலவீனங்களையும் தவறுகளையும் இவ்வருடத்தில் அகற்றி விட வேண்டும். நமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அதனைப் பெறுவதற்காகவே உடன்படிக்கை செய்துள்ளோம்**

**புத்தாண்டு தொடக்கத்தின் முதல் இரவில் தஹஜ்ஜுத் ஜமாஅத்துடன் தொழுதல் மற்றும் ஃபஜ்ர் தொழுதல் மட்டுமே முழு வருடத்திற்கும் போதுமானதல்ல. மாறாக, இந்த முயற்சியை முடிந்த வரை வருடம் முழுவதும் தொடர்வதுதான் உண்மையான நற்செயல் ஆகும்**

**இந்த காலத்தில் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகள் மற்றும் கூற்றுக்களின் ஒளியில் பொருள் தியாகத்தின் உண்மையான ஞானத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே நமக்கு வழங்கியுள்ளார்கள்**

**பொருள் தியாகம் நமக்கு பயன் தருவதற்காகவே ஆகும்**

**எதிரிகள் ஜமாஅத்தை அழிக்க விரும்பினர். ஆனால் இந்த எதிர்ப்புகள் சில அஹ்மதிகளை ஈமானில் பல மடங்கு அதிகரிக்கச் செய்து விட்டது**

**நமது பணி என்னவென்றால், நாம் நம்மைச் சீர்திருத்த வேண்டும். அல்லாஹ்விற்கு முன்பு குனிய வேண்டும். மேலும் அதிகம் அதிகமாக தப்லீக்கின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தியாகத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை உலகத்திற்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்**

**அல்லாஹ் பொருள் தியாகத்தில் பங்கு பெற்ற முழு உலகத்திலுள்ளவர்களது பொருளிலும், உயிரிலும் பரக்கத் செய்வானாக. மேலும் வருங்காலத்திலும் மேலான தியாகங்களைச் செய்வதற்கான நற்பாக்கியத்தை தந்தருள்வானாக**

**வக்ஃபே ஜதீதின் 61 வது ஆண்டு அருளுக்குரியதாக முடிந்தது. மேலும் புதிய ஆண்டிற்கான அறிவிப்பின்போது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவோம் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றிய உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த ஜமாஅத்தின் கலப்பற்றவர்களின் பொருள் தியாகம் தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை எடுத்துக் கூறியவாறு புதிய ஆண்டிற்கான வாழ்த்துக்களை தெரிவிப்பதன் தத்துவத்தையும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 04 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **04 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று 2019 ஆம் ஆண்டின் முதல் ஜுமுஆ ஆகும். இதனால் நான் உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவ்வருடத்தை அல்லாஹ் வாழ்த்துக்குரியதாக ஆக்குவானாக. இவ்வாண்டு எண்ணற்ற வெற்றிகளைக் கொண்டு வரட்டுமாக. ஆனால் நாம் இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் சம்பிரதாயமான வாழ்த்துக்களைக் கூறுவதனால் எந்த பயனும் இல்லை. சம்பிரதாயமான வாழ்த்துச் செய்திகள் இறைவனின் திருப்தியைப் பெற்றுத் தருவதும் இல்லை.

வருடத்தின் உண்மையன வாழ்த்துச் செய்தி என்னவென்றால், நாம் ஓர் உறுதி எடுக்க வேண்டும். நமக்கு இறைவன் இன்னொரு வருடத்தினைக் காட்டித் தந்துள்ளான். இன்னொரு வருடத்தில் நம்மை நுழையச் செய்துள்ளான். இதில் நாம் நமக்குள் இருந்த பலவீனங்களையும் இருள்களையும் அகற்ற முயற்சி செய்ய வேண்டும். கடந்த வருடத்தில் ஏற்பட்ட பலவீனங்களையும் தவறுகளையும் இவ்வருடத்தில் அகற்றி விட வேண்டும். நமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அதனைப் பெறுவதற்காகவே உடன்படிக்கை செய்துள்ளோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் அஹ்மதி எப்படி இருக்க வேண்டும்? என்று விளக்கியவாறு கூறினார்கள்:

‘‘மனிதன் பைஅத் செய்து விட்டு இவ்வியக்கம் உண்மையானது என்று நம்பினால் மட்டும் போதாது. இவ்வளவு நம்பினால் மட்டும் பரக்கத் ஏற்படும் என்று நம்பி விடக் கூடாது. மாறாக, இந்த இயக்கத்தில் நுழைந்து விட்டீர்கள் என்றால், நல்லவர்களாக ஆக முயற்சி செய்யுங்கள். முத்தகி (இறையச்சம் உள்ளவர்) ஆகுங்கள். ஒவ்வொரு தீமையிலிருந்தும் விலகுங்கள். இரவும் பகலும் உழையுங்கள். நாவை மென்மையாக்குங்கள். பாவமன்னிப்புத் தேடுவதை உங்கள் வழக்கமாக்குங்கள். தொழுகையில் துஆ செய்யுங்கள். தொழுகையில் துஆக்கள் இருக்கும் என்றால் தொழுகையின் உரிமைகள் நிறைவேற்றப்படும். அதனை கவனித்து தொழுபவர்கள் ஆவீர்கள். ‘‘

அன்னார் கூறினார்கள்: ‘‘என்னை நம்புவது மட்டும் மனிதனுக்கு போதுமானதல்ல. இறைவன் வெறும் சொல்லால் திருப்தி அடைவதில்லை. திருக்குர்ஆனில் அல்லாஹ் ஈமானுடன்

நற்செயலையும் வைத்துள்ளான். நற்செயல் என்று எதனை கூறப்படும் என்றால், அதில் அணுவளவு கூட கிளர்ச்சி இருக்கக் கூடாது.''

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 274–275 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்தத் தகுதியைத்தான் இந்த செயல்முறையைத்தான் நாம் இவ்வருடம் நடைமுறைப்படுத்த வேண்டும். இவற்றை பெறுவதற்கு நாம் நமது எல்லா திறமைகளையும் பயன்படுத்த முயற்சி செய்தோம் என்றால் நிச்சயமாக இவ்வருடம் நமக்கு வாழ்த்துக்குரியதாகவும், அதிகமான பரக்கத்துகளைக் கொண்டு வரும் ஆண்டாக அமையும். இல்லையென்றால், நமது புத்தாண்டு வாழ்த்துக்கள் சம்பிரதாயமான வாழ்த்துக்கள் ஆகும். புத்தாண்டு தொடக்கத்தின் முதல் இரவில் தஹஜ்ஜுத் ஜமாஅத்துடன் தொழுதல் மற்றும் ஃபஜ்ர் தொழுதல் மட்டுமே முழு வருடத்திற்கும் போதுமானதல்ல.

மாறாக, இந்த முயற்சியை முடிந்த வரை வருடம் முழுவதும் தொடர்வதுதான் உண்மையான நற்செயல் ஆகும். அல்லாஹ் நமக்கு இதற்கு அருள் புரிவானாக. உண்மையில் நமது சொந்த வாழ்விலும் பரக்கத்தினைக் கொண்டு வருவதாக அமையட்டுமாக. நாம் ஜமாஅத்தின் அசாதாரண முன்னேற்றங்களையும் பார்ப்போமாக!

இதற்குப் பிறகு நான் இன்று இன்னொரு கருத்தின் பக்கம் வருகிறேன். நாம் ஏற்கெனவே அறிந்தது போன்று ஜனவரி முதல் வக்ஃபே ஜதீதின் புத்தாண்டு தொடங்குகிறது. ஜனவரியின் முதல் அல்லது இரண்டாவது ஜுமுஆ குத்பாவில் பொதுவாக வக்ஃபே ஜதீதின் வருடம் குறித்து அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தின் பொருள் தியாகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உள்ளது.

இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைகள் மற்றும் வழிகாட்டலின் ஒளியில் இந்தப் பொருளாதார தியாகத்தின் சிறப்பான புரிதலை வழங்கியுள்ளார்கள். திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. அல்லாஹ்வுக்கு நம்முடைய பொருள் தேவை என்பதால் அல்ல. மாறாக, இதனால் நமக்குதான் பயன் கிடைக்கிறது. ஒட்டுமொத்த அளவில் ஜமாஅத்தின் முன்னேற்றத்தையும் பார்க்கிறோம். ஜமாஅத்திற்கும் அதனால் பயன் கிடைக்கிறது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

فَاتَّقُوا اللّٰهَ مَا اسۡتَطَعۡتُمۡ وَ اسۡمَعُوۡا وَ اَطِیۡعُوۡا وَ اَنۡفِقُوۡا خَیۡرًا لِّاَنۡفُسِکُمۡ
وَ مَنۡ یُّوۡقَ شُحَّ نَفۡسِہٖ فَاُولٰٓئِکَ ہُمُ الۡمُفۡلِحُوۡنَ

அல்லாஹ்வுக்கு பயப்படுங்கள். உங்களால் முடிந்த வரை செய்யுங்கள். நீங்கள் கேளுங்கள்; கட்டுப்படுங்கள். செலவு செய்யுங்கள். இது உங்களுக்கு சிறந்ததாகும். நஃப்ஸின் கருமித்தனத்திலிருந்து தப்பிக்கக் கூடிய இவர்களே வெற்றிக்குரியவர்கள் ஆவர். (64:17)

பிறகு அடுத்த வசனத்தில் கூறுகிறான்:

اِنۡ تُقۡرِضُوا اللّٰهَ قَرۡضًا حَسَنًا یُّضٰعِفۡهُ لَکُمۡ وَ یَغۡفِرۡ لَکُمۡ ؕ وَ اللّٰهُ شَکُوۡرٌ حَلِیۡمٌ

நீங்கள் அல்லாஹ்வுக்கு அழகிய கடன் தருவீர்கள் என்றால் அவன் உங்களுக்கு அதனை அதிமாக்கித் தருவான். உங்களை மன்னிப்பான். அல்லாஹ் மிகவும் மதிப்பளிப்பவனும் சகிப்பவனும் ஆவான். (64:18)

எனவே அல்லாஹ் தன் வழியில் செலவிடுபவர்களுக்கு மிகவும் அதிகமாக்கித் தருகிறான். இந்த பொருள் தியாகத்தினால் தனிப்பட்ட பயனும் உள்ளது. ஜமாஅத்திற்கு முன்னேற்றமும் உள்ளது. பிறகு தனி மனிதர்களின் மதிப்பளித்தலும் கிடைக்கிறது.

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''கருமித்தனத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். அதுவே முந்தைய சமுதாயத்தை அழித்தது.''

(சுனன் அபீதாவூது, கிதாபுஸ் ஸக்காத் ஹதீஸ் எண் 1698)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: ''நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். அரை பேரீத்தம்பழம் கொடுக்க சக்தி இருந்தாலும் சரியே.''

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸக்காத் ஹதீஸ் எண் 1417)

சாதாரண செலவைக் கூட அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்தால் அது நெருப்பிலிருந்து காப்பாற்றுகிறது. எனவே, இந்த பொருள் தியாகங்கள் நமக்கு பயன் தருவதற்காகவே வைக்கப்பட்டுள்ளன.

இந்த பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நீங்கள் செல்வத்தையும் நேசித்துக் கொண்டு அல்லாஹ்வையும் நேசிப்பது உங்களுக்கு முடியாத காரியமாகும். ஆகவே நற்பேறு பெற்றவர் இறைவன் மீது நேசம் கொள்பவரேயாவார். உங்களில் ஒருவர் அல்லாஹ் மீது நேசம் கொண்டு அவன் வழியில் செல்வத்தை செலவு செய்தார்கள் என்றால் நான் நிச்சயமாக திட உறுதி கொள்கிறேன். அவரது செல்வத்தில் மற்றவரை விட அதிகமாக பரக்கத் செய்யப்படும். ஏனெனில் செல்வம் தானாகவே வருவதில்லை. மாறாக, இறைவனது விருப்பத்தில்தான் வருகிறது.

எனவே எவர் இறைவனுக்காக செல்வத்தின் ஒரு பகுதியை செலவு செய்கிறார் என்றால் அவர் நிச்சயமாக அதனை பெறுவார். ஆனால் எவர் செல்வத்தின் மீது நேசம் வைத்து இறை வழியில் செய்ய வேண்டிய அளவுக்கு தொண்டு செய்யவில்லையோ அவர் தமது பொருளை இழப்பார். அது அழியும். ஒருபோதும் பொருள் உங்கள் முயற்சியால் கிடைக்கிறது என்று நினைக்காதீர்கள்.

மாறாக, அது இறைவன் புறமிருந்துதான் வருகிறது. நீங்கள் செல்வத்தின் சிறு பகுதியை வழங்கி விட்டு அல்லது வேறு ஏதாவது ஒரு தொண்டினை செய்து விட்டு, இறைவன் மற்றும் அவனது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கருணை காட்டி விட்டதாக ஒருபோதும் கருதாதீர்கள். மாறாக, உங்களை இந்தத் தொண்டிற்காக தேர்ந்தெடுத்தது அவனது கருணையாகும். நீங்கள் நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். இந்த பணி வானத்திலிருந்து வந்தது. உங்களது தொண்டுகள் உங்களின் நலனிற்காகவே ஆகும்.''

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 497–498)

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் மக்கள் தியாகம் மற்றும் தொண்டின் ஆன்மாவை உணர்ந்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்தவாறு, விரைந்து தியாகத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றனர். நீண்ட காலம் அஹ்மதிய்யத்தில் இருப்பவர்கள் மட்டுமின்றி புதிதாக பைஅத் செய்தவர்கள் கூட பைஅத் செய்த பிறகு பொருள் தியாகத்தின் ஆன்மாவை புரிந்துள்ளார்கள். அவர்கள் மிகவும் ஏழ்மையில் வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பொருள் தியாகத்தில் எவரையும் விட பின்னால் நிற்க விரும்புவதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் சில சஹாபாக்கள் செய்தது போன்ற தியாகத்தைச் செய்கின்றனர். அத்தகையோரைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது

(அலை) அவர்க கூறினார்கள்: நான் எனது ஜமாஅத் மக்களிடம் காணப்படும் நேசம் மற்றும் பற்று குறித்து ஆச்சரியப்படுகிறேன். அவர்களுள் சிலர் மிகவும் குறைந்த வருமானம் கொண்டவர்கள் ஆவர்.

பிறகு அதற்கு உதாரணம் தந்து கூறுகின்றார்கள்: மியான் ஜமாலுத்தீன், கைருத்தீன், மியான் இமாமுத்தீன் கஷ்மீரி ஆகியோர் நமது ஊருக்கு அருகில் வாழ்பவர்கள். இந்த மூவரும் தினமும் 3–4 அனாவுக்கு கூலி வேலை செய்பவர்கள். இவர்கள் சிரத்தையுடன் மாதாமாதம் சந்தா வழங்குகிறார்கள். சந்தாவில் கலந்து கொள்கிறார்கள்.

(ஸமீமா அன்ஜாமே ஆத்தம், ரூஹானி கஸாயீன் தொகுதி 11 பக்கம் 311 அடிக்குறிப்பு)

இந்த பெரியவர்களின் மார்க்கப் பரப்புதலுக்கான தியாகங்களின் காரணமாக இன்று அவர்களின் பிள்ளைகள், சந்ததிகள் வசதியாக வாழ்கிறார்கள். இந்த ஆன்மாவை இன்னும் சில இடங்களில் காண முடிகிறது. இன்னும் சொல்வதாயின், பல இடங்களில் காண முடிகிறது.

மிகத் தூரத்திலுள்ள ஏழைகள் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்திற்கு 100 ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தும் கூட காலத்தின் கலீஃபாவை ஒருபோதும் நேருக்கு நேர் சந்தித்து இருக்கவில்லை என்றாலும் கூட மார்க்கத்தின் மீதுள்ள அன்பு, கட்டுப்படுதல், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட பற்று, உறுதிமொழி, பைஅத் உறுதிமொழி, மார்க்கத்திற்காக தியாகம் செய்யும் உணர்வு அவர்களிடம் எந்த அளவுக்கு அதிகமாக உள்ளது என்றால் ஆச்சரியமாக உள்ளது. இவர்களின் இந்த ஒரு விஷயத்தை மட்டும் பார்த்தால் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு பெரும் ஆதாரம் ஆகும்.

இந்த உணர்வை இறைவனைத் தவிர வேறு யாரும் உள்ளங்களில் இட முடியாது. சிலரது தியாகங்கள் மற்றும் நன்னடத்தை குறித்து அவர்களில் சிலரின் சம்பவங்களை எடுத்து வைக்கிறேன்.

கானாவில் ஒரு நண்பர் பிரிம்பூன்ங் (Frimpong) சாஹிப் கூறுகிறார்:

சில வருடங்களுக்கு முன்பு நான் எனது கல்விக்காக 5 ஆயிரம் பவுண்டு கடன் வாங்கியிருந்தேன். அப்போது வேலையும் செய்து வந்தேன். ஆனால் எனது 12 மாத சம்பளத்தையும் சேர்த்தாலும் கூட அவ்வளவு தொகை வராது. வங்கியில் எனக்கு 3 ஆயிரம் பவுண்டு கடன் கிடைத்தது. எனது சம்பளத்தில் 40 சதவீதம் கடனை திருப்பிச் செலுத்துவதில் செலவானது. ஆனால் நான் அதனை பொருட்படுத்தாமல் 40 சதவீதம் போய் விடுகிறதே என்பதனை பொருட்படுத்தாமல் முழு சம்பளத்திற்கும் உரிய சந்தாவைக் கொடுத்து வந்தேன்.

ஒருநாள் நான் குமாஸி மிஷன் ஹவுஸுக்குச் சென்றேன். குமாஸி கானாவின் ஒரு நகரமாகும். மிஷனரி எனக்கு வக்ஃபே ஜதீது சந்தாவின் வாக்குறுதியை நினைவுபடுத்தினார். நான் எனது சட்டைப் பையில் கை விட்டபோது நான் வாக்குறுதி கொடுத்த தொகை இருந்தது. ஆனால் இதனை சந்தாவாக கொடுத்து விட்டால் என்னிடம் வேலைக்குச் செல்வதற்குக் கூட எஞ்சிய நாள்களுக்கு பைசா இருக்காதே என்று தோன்றியது.

இருந்தும் அந்தத் தொகையைச் சந்தாவாக கொடுத்து விட்டு, மிஷன் ஹவுஸிலிருந்து வீட்டிற்குத் திரும்பினேன். போனில் மெஸேஜ் வந்திருந்தது. எனது வங்கிக் கணக்கில் சிறிது தொகை வந்திருந்தது. அது நான் சந்தாவாக கொடுத்ததை விட ஐந்து மடங்கு அதிகமாகும். அல்லாஹ் அதிகமாக்கித் தருவான் என்று ஏற்கெனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள் என்று பார்த்தோம். தவறுதலாக வங்கியில் எனக்கு ரொக்கம் வந்து விட்டதோ என்று நினைத்தேன். ஒருவேளை பிறகு திரும்பவும் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் சம்பளம் முதலிலேயே என் கணக்கில் வந்து விட்டது. மறுநாள் நான் பணிக்குச் சென்ற போது அரசு தரப்பிலிருந்து இந்த தொகை வந்துள்ளது என்பது தெரிய வந்தது. இது கடந்த மாதங்களின் நிலுவைத் தொகையாக வந்துள்ளது என்று தெரிந்து நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினேன். அல்லாஹ் எனக்கு பயம் இருந்த நிலையிலும் கூட சந்தா கொடுப்பதற்கு ஒரு துணிச்சலை வழங்கினான். அந்நாளிலிருந்து எனது வாக்குறுதிகளுக்கு சந்தாக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் தருகிறேன்.

ஆப்பிரிக்காவைச் சார்ந்தவர். மிக தூரப் பகுதியில் வாழ்பவர். ஆப்பிரிக்காவின் ஃபுர்கினோஃபாஸோ என்ற வேறு ஒரு நாடு. இது பிரெஞ்சு பேசுபவர்களின் நாடு. அங்குள்ள போபோ ஜிலாசூ (Bobo-Dioulasso) என்ற ஊரிலுள்ள முபல்லிக் எழுதுகிறார்:

ஒரு புதிதாக பைஅத் செய்த இளைஞர் ஸூதி (zodi) சாஹிப். இவர் மன அழுத்தப் பிரச்சனையால் கஷ்டப்பட்டு வந்தார். மன அழுத்தம் அதிகமாகி உறங்குவதற்கு மாத்திரை எடுக்க வேண்டிய நிலையில் இருந்தார். ஒருநாள் எங்கள் மிஷன் ஹவுஸுக்கு வந்தார். வக்ஃபே ஜதீது சந்தா, தஹ்ரீகே ஜதீது சந்தா எவ்வளவு? அதனை தர விரும்புகிறேன் என்றார். நமது மிஷனரி அவரிடம், உங்களால் முடிந்ததை தாருங்கள் என்றார். உடனே அவர் விகிதாச்சாரப்படி என்ன தர வேண்டும்? என்று கேட்டார். மிஷனரி கூறியதும் மகிழ்ச்சியுடன் அதனை செலுத்தினார். உடனே போய் விட்டார்.

சில நாள் கழித்து வந்து கூறினார். நான் நோயுற்றிருந்தேன். சந்தாவின் பரக்கத்தால் எனது நிலை மிகவும் நன்றாகி விட்டது. இப்போது நான் தூக்க மாத்திரை எடுப்பதை விட்டு விட்டேன். உள்ளத்தில் ஓர் அமைதியை உணர்கிறேன் என்றார். பைஅத் செய்த பிறகு அல்லாஹ்வின் பக்கம் கவனம் திரும்பியது. இறை வணக்கத்தில் கவனம் ஏற்பட்டது. பிறகு அல்லாஹ் அருள் புரிந்தான். ஆனால் அதற்கு முன் அவரது நிலை எவ்வாறிருந்தது என்றால் தற்கொலை செய்யும் அளவுக்கு சென்று விட்டிருந்தார்.

யூ.கே –வின் ஒரு நண்பர் கூறுகிறார்: சில காலம் முன்பு போனில் என்னிடம் வக்ஃபே ஜதீது சந்தா செலுத்துமாறு நினைவூட்டப்பட்டது. கடந்த வருடம் நான் எவ்வளவு செலுத்தினேன் என்றும் கூறப்பட்டது. நான் சென்ற வருடத்தை விட சற்று அதிகமாக்கி இவ்வருடம் வாக்குறுதி வழங்கினேன். அப்போது என்னிடம் சிறிதும் பணம் இருக்கவில்லை. நான் துஆ செய்ய தொடங்கினேன். அல்லாஹ்வே! நீயே ஏற்பாடு செய் என்று கேட்டேன். பிறகு இரண்டு வாரம் கழித்து Tax Department –ல் இருந்து எனக்கு கடிதம் வந்தது. நடப்பு ஆண்டில் வரி அதிகம் செலுத்தி இருந்தேன். அத்தொகை திருப்பி தரப்பட்டது. நான் ஒரு கணக்கர் ஆவேன். எனது வரி சம்பந்தமாக எனக்கு நன்றாக தெரியும்.

ஆனால் அல்லாஹ் அற்புதமான முறையில் எனக்கு அத்தொகையை ஏற்பாடு செய்தான். எனது கணக்கின்படி முழுமையாக நான் கொடுத்திருந்தேன். பிறகு சில மாதங்கள் கழித்து சதர் சாஹிப் போன் செய்தார். வக்ஃபே ஜதீது சந்தாவை குறித்து நினைவூட்டினார். கடந்த வருடம் நான் இவ்வளவு சந்தா கொடுத்துள்ளாதாகக் கூறினார். நான் தற்போது கடந்த வருடத்தை விட சற்று அதிகமாக்கி வாக்குறுதி எழுதச் செய்தேன். தற்செயலாக அப்போது என்னிடம் பணம் இல்லை. நான் பிறகு யோசித்தேன். அல்லாஹ் சென்ற முறை Tax Refund மூலமாக ஏற்பாடு செய்தான். இப்போது வெளிப்படையாக ஒரு வழியும் தெரியவில்லை.

பிறகு நான் துஆவில் ஈடுபட்டேன். ஒரு வாரம் கழித்து நான் அந்த காகிதங்களைப் பார்த்த போது ஒரு பில் தென்பட்டது. அதில் ஒரு தொகை இருந்தது. நான் கம்பெனிக்குப் போன் செய்தேன். பிறகு எனக்கு Repaid Card போட்டுத் தரப்பட்டது. அதில் நான் சந்தாவாக தர வேண்டிய தொகையை விட அதிகமாக இருந்தது. இவ்வாறு அல்லாஹ் வக்ஃபே ஜதீது சந்தாவைச் செலுத்த ஏற்பாடு செய்தான்.

இங்கு ஆப்பிரிக்காவில் மட்டுமல்ல. பல இடங்களில் நல்ல நிய்யத்துடன் சந்தா கொடுக்க விரும்பினால் அவர்களுக்கு இந்நிலையை அல்லாஹ் காட்டுகிறான்.

ஃபுர்கினோஃபாஸோவிலிருந்து பஷாரத் அலி சாஹிப் என்ற முபல்லிக் கூறுகிறார்:

புரோமே (Boromo) மண்டலத்தில் ஒரு புதிதாக பைஅத் செய்த அஹ்மதி கோன்அடமா (Kone Adama) ஆதம் சாஹிபிற்கு வக்ஃபே ஜதீது பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அவர் ஒவ்வொரு வருடமும் மவ்லவியிடம் கொடுத்து வந்ததை இங்கு சந்தாவாகக் கொடுத்து விட்டார். அவர் முஸ்லிமாக இருந்தார். மவ்லவிமார்களிடம் பணம் கொடுத்து வந்தார். பைஅத் செய்த பிறகு அதனை சந்தாவாகக் கொடுத்தார். இவரது தகப்பனாருக்கு தெரிந்தபோது பெரிதும் கோபம் கொண்டார். ஒரு பகுதி நிலத்தைக் கொடுத்து அவரை தனியாக வைத்து விட்டார். இவ்வருடம் விளைச்சல் மிகவும் நன்றாக இருந்தது. சில இடங்களில் அதிக மழையின் காரணமாக சேதம் ஏற்பட்டிருந்தது.

ஆனால் இவரது நிலத்தில் தண்ணீர் உள்ள இடத்தில் கூட சேதம் ஏற்படவில்லை. இவருடைய தந்தை மற்றும் உறவினர்களின் பயிர் அதிக அழையால் சேதமடைந்திருந்தது. அவர் தமது தந்தைக்கு மீண்டும் நடவுக்கு உதவியும் செய்தார். தமது விளைச்சலிலிருந்தும் பங்கு கொடுத்தார். உடனே அவரது தந்தை நிச்சயமாக நீர் முஸ்லிமாக இருந்து அஹ்மதியாகி விட்டாய். நிச்சயமாக உனது ஜமாஅத்திற்கு சந்தா கொடுப்பதன் விளைவால் அல்லாஹ் இந்த அருளைச் செய்துள்ளான் என்று கூறினார்; ஒப்புக் கொண்டார்.

மேலும் கூறினார்: உனது ஜமாஅத் உண்மையானது. அதில் நீ நிலைத்து நில். ஆனால் எனது நிர்பந்தம் எனக்கு மவ்லவிகளை விட்டு விட்டு வர முடியாது. பல பழைய சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து மக்களுக்கு விடுபட முடிவதில்லை. இவ்வருடம் அவர் இரு மடங்கு வாக்குறுதி கொடுத்துள்ளார்.

கேம்பியாவின் கியாங்க் (Kiang) மாவட்டத்தின் ஓர் ஊரில் ஜமாஅத்தின் எதிரிகள் ஜமாஅத் மக்களை அங்கிருந்து அகற்ற முயற்சி செய்தனர். எல்லாரையும் அஹ்மதிய்யத்தில் இருந்த அகற்றுவதில் வெற்றி பெற்று விட்டதாக வாதமும் செய்தர். உடனே நமது அஹ்மதி உறுப்பினர் ஜாலூ அவரிடம் கூறினார்: மவ்லவிமார்களின் முயற்சிகள் ஜமாஅத்திற்கு ஓர் உரத்தின் வேலையைத்தான் செய்கின்றன. முன்னர் நான் செயற்துடிப்புள்ள அஹ்மதியாக இருக்கவில்லை. இப்போது நான் வக்ஃபே ஜதீது சந்தா கொடுக்கிறேன். மேலும் வஸிய்யத்தின் அருளுக்குரிய திட்டத்திலும் இணைந்துள்ளேன் என்றார். எதிரிகள் ஜமாஅத்தை அழிக்க விரும்பினர். ஆனால் அந்த எதிர்ப்பு அஹ்மதிகளை அவர்களின் ஈமானில் முன்னரை விட அதிகமாக்கி விட்டது.

கினிகனாகரி என்றவொரு நாடு. அங்குள்ள நண்பர் அகோபி (Akobi) சாஹிப் கூறுகிறார்:

மிஷனரி இன்சார்ஜ் எனது வக்ஃபே ஜதீது குத்பாவை போட்டுக் காட்டியுள்ளார். அது நான் சென்ற வருடம் ஓதியது. அதில் வக்ஃபே ஜதீது சந்தாவில் பணம் கொடுத்த மக்களைப் பற்றி கூறப்பட்டிருந்தது.

அவர் கூறுகிறார்: அதனைக் கேட்டு என் உள்ளத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. மறுநாள் நான் எனது வேலைக்காக செரொலியோன் சென்றேன். பயணத்திற்கு என்னிடம் 300 டாலர்தான் இருந்தது. எனக்கு பணத்தின் பெரும் தேவை இருந்தது. இருந்தும் கூட 300 டாலரில் ஒரு 100 டாலரை எடுத்து ஒரு கவரில் போட்டு வக்ஃபே ஜதீதில் செலுத்துவதற்காக தனியாக எடுத்து வைத்தேன். இதன் பிறகு நான் வேறு பணியில் ஈடுபட்டு விட்டேன். கவரை அனுப்பவும் மறந்து விட்டேன். பேச்சு நடந்து இரண்டு மணி நேரம்தான் கழிந்திருக்கும்.

என் அலுவலகத்திற்கு ஒருவர் வந்தார். என்னிடம் ஒரு கவரை கொடுத்து கூறினார். இதனை உங்கள் இன்ன நண்பர் அனுப்பினார். நான் கவரை பிரித்துப் பார்த்தேன். அதில் 300 டாலர் இருந்தது. நீங்கள் பயணத்தில் செல்கிறீர்கள். செலவுக்காக தருகிறேன் என்று எழுதப்பட்டிருந்தது. உடனே எனக்கு நினைவு வந்தது. நான் சந்தாவுக்காக எடுத்து வைத்த அந்தப் பணத்தை அனுப்பவும் கூட இல்லை. அதற்குள் அல்லாஹ் அதனை பன்மடங்கு அதிகமாக்கி திருப்பித் தந்து விட்டான்.

பிறகு கூறுகிறார்: இறைவனை புகழ்வதில் எனது உள்ளம் நிறைந்து விட்டது. அல்லாஹ் எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அன்பிற்குரிய ஜமாஅத்தில் இணைவதற்குரிய வாய்ப்பினை வழங்கியுள்ளான்.

இவ்வாறு அல்லாஹ் மக்களின் ஈமானை அதிகமாக்கிக் கொண்டே செல்கிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதை பார்த்தோம் அல்லவா? பொருள் அல்லாஹ்வின் தரப்பிலிருந்துதான் கிடைக்கிறது.

பெனின் மண்டலத்தின் போஹிகோன் (Bohicon) என்ற பகுதியின் முபல்லிக் எழுதுகிறார்: அங்குள்ள அபூமே (Abomey) என்ற ஒரு ஜமாஅத்தின் சதர் அஹூன்கான் ஜசக் (Ahouangan Jacques) சாஹிப் கூறுகிறார்:

அவருக்கு பெரும் தொகை கடனாக செலுத்த வேண்டியதிருந்தது. செலுத்த முடியவில்லை. இந்நிலையில் அவரது பகுதியின் முஅல்லிம் வக்ஃபே ஜதீது சந்தா பற்றி அதன் முக்கியத்துவத்தைக் கூறினார். வருடம் முடிவடைகிறது. எவர் அதனை கொடுக்கவில்லையோ அவர்கள் விரைவாக செலுத்துங்கள் என்றார். அப்போது என்னிடம் பணம் இல்லை. எனது கடனுடன் வக்ஃபே ஜதீது சந்தா கொடுக்க வேண்டுமே என்ற இந்தக் கவலையும் சேர்ந்து கொண்டது. அப்போது சட்டைப் பையில் 500 ஃபிராங்க்ஸிபா இருந்தது. அதனை சந்தாவாக கொடுத்து விட்டு துஆ செய்தேன். அல்லாஹ்வே! என் கடனை எவ்வாறு கொடுப்பேன்?

அவர் கூறுகிறார்: மறுநாளே எனக்கு ஒரு பணி கிடைத்தது. அது சில நாட்களின் பணிதான். அதன் கூலியாக நிர்ணயிக்கப்பட்ட தொகை எனது கடன் தொகையை விட சற்று அதிகம். நான் அப்பணியை செய்தேன். சில நாட்களில் பணி முடிந்தது. முழு கடனும் நிறைவேறியது. வீட்டின் வாழ்வாதாரமும் கிடைத்து விட்டது. இது சந்தாவின் பரக்கத் என்றுதான் கருதுகிறேன்.

இம்மக்கள் இதனையெல்லாம் தற்செயல் என்று நினைப்பதில்லை. நிச்சயமாக அல்லாஹ்தான் ஏற்பாடு செய்கிறான் என்று கருதுகின்றனர்.

மாலி மண்டலத்திலுள்ள ஸிகாஸோவின் (Sikasso) முபல்லிக் கூறுகிறார்:

புதிதாக பைஅத் செய்த அபுபக்கர் என்பவர் கூறினார். அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு சந்தாக்களினால் பெரும் பரக்கத்தை உணர்ந்தேன். எனது மகன் மழைக் காலத்தில் பெரும் நோயுற்றான். சிகிச்சைக்காக பெரும் தொகை செலவானது.

துக்கமும் பணி விடுப்பின் துயரமும் வேறு ஏற்பட்டது. நான் சந்தா கொடுக்க ஆரம்பித்ததில் இருந்து அல்லாஹ்வின் அருளால் மகன் நோயுறவில்லை. எனக்கு சிறிது சந்தேகம் இல்லை. இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ததன் விளைவாகும்.

ஐவரிகோஸ்ட்டின் சான்பெட்ரோ (San-Pedro) மண்டலத்தின் ஓர் ஊர் காம்ப் எலிபேண்ட் (Kamp Elephant) அதன் சில நபர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. கடந்த 2018 ஆம் ஆண்டில் ஜமாஅத்திற்கு சுற்றுப் பயணம் செய்தேன். ஓர் இரவு அங்கு தங்கினேன். இரவில் நீண்ட நேரம் தப்லீக் செய்தேன். அஹ்மதி அல்லாத மக்கள் அதிகம் பேர் நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். அதன் பிறகு ஓர் அஹ்மதி நண்பரின் வீட்டில் ஃபஜ்ர் தொழுகை நடந்தது. அதில் அஹ்மதி மக்கள் கலந்து கொண்டனர். சில அஹ்மதிகளிடம் தர்ஸுக்குப் பிறகு அடுத்த மாதம் வக்ஃபே ஜதீது சந்தாவின் கடைசி மாதமாகும் என்று கூறப்பட்டது.

எனவே எல்லா அஹ்மதிகளும் முயற்சி செய்து பங்கெடுங்கள் என்று கூறப்பட்டது. உடனே தர்ஸிற்குப் பிறகு மக்கள் வீட்டிற்குச் சென்றனர். நான் யோசித்தேன். இது ஒரு ஏழைகள் வாழும் பகுதி. அதிகபட்சம் 5 ஆயிரம் ஃபிராங்க்ஸிபா வசூலாகலாம். அதுவும் சிரமத்துடன் என்று நினைத்தேன். இவர்களைப் பொருத்தவரையில் இதுவே அதிகமாகும்.

ஆனால் மக்கள் திரும்பி வந்தபோது எனது வியப்பிற்கு எல்லையே இல்லை. ஒரு நண்பர் என்னிடம் வந்து நாங்கள் மன்னிப்புக் கேட்கிறோம். இப்போது விளைச்சல் தயாராகவில்லை. மிகவும் கஷ்டமான நிலை. எனவே தற்போது 17 ஆயிரம் ஃபிராங்க்ஸிபா மட்டும் வழங்குகிறோம் என்றார். அல்லாஹ் எங்கள் தொழில்கள் மற்றும் விளைச்சல்களை அதிகப்படுத்த துஆ செய்யுங்கள். அதனால் நாங்கள் அதிகம் சந்தா கொடுப்போம் என்றார்.

இந்தியாவிலிருந்து இக்பால் என்ற இன்ஸ்பெக்டர் சாஹிப் எழுதுகிறார்:

காமரெட்டி ஜமாஅத்தில் வக்ஃபே ஜதீது சந்தா பற்றி கூறப்பட்டது. ஓர் இளைஞர் அப்போது தனது முழு சந்தாவையும் வழங்கி விட்டார். பிறகு அவருக்கு ஒரு பெரும் தொகை கிடைத்தது குறித்து செய்தி வந்தது. அத்தொகையை 5 வருட காலமாக எதிர்பார்த்திருந்தார். ஆனால் எவ்வளவு காலம் கழிந்து விட்டது என்றால் அது கிடைக்கும் என்ற நம்பிக்கையையே விட்டு விட்டார். அந்த பணம் கிடைத்தது மட்டுமின்றி இவரது தற்காலிக பணி நிரந்தரம் ஆகிவிட்டது. இதனால் அவர் மிகவும் மகிழ்ந்தார். இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ததன் விளைவாக இந்த அற்புதம் நிகழ்ந்தது என்று கூறுகிறார். இனி ஒவ்வொரு வருடமும் எனது 15 நாட்கள் வருமானத்தை வக்ஃபே ஜதீது சந்தாவாக கொடுத்து விடுவேன்.

ருமேனியா என்ற கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பஹின் என்ற அங்குள்ள முபல்லிக் எழுதுகிறார்:

அங்குள்ள ருமேனியன் அஹ்மதி ஒருவர் தையல் தொழில் செய்கிறார். சந்தாவில் மிகவும் பேணுதல் உள்ளவர். மிகவும் கலப்பற்ற தன்மையும் தாராளமாக சந்தாவும் கொடுப்பார். சந்தாவை நினைவூட்டவே தேவை ஏற்பட்டதில்லை. தாமே வந்து வழங்கி விடுவார். மிகவும் சாதாரண கவரில் அல்லது ஒரு தாளில் மடித்து தருவார். கவரில் பொருள் தியாகம் சம்பந்தமான வார்த்தைகள் இருக்கும். அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அந்த கடிதத்தைப் பற்றி பஹின் சாஹிப் குறிப்பிடுகிறார்.

அவர் எழுதுகிறார்: நான் அல்லாஹ்வின் அருளால் சந்தா கொடுக்கிறேன். நான் சந்தா கொடுக்க ஆரம்பித்ததில் இருந்து பார்த்து வருகிறேன். இறைவனின் திருப்திக்காக சந்தா கொடுப்பதுடன் எனக்கு பொருள் வளர்கிறது. வருமானத்தில் இறைவனது அருள் உள்ளது. ஒருபுறம் நான் இறை வழியில் செலவு செய்ய எனது பையிலிருந்து எடுக்கும் போது இறைவன் அந்த தொகையை அதிகரித்து எனது பையில் இடுகிறான். சந்தாவுக்குப் பிறகு என்னிடம் பணிக்காக நிறைய பேர் வருகிறார்கள். இம்மக்கள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து கொண்டு உலகியல் பணி செய்து கொண்டிருந்தவர்கள் அஹ்மதிய்யத்திற்கு வந்த பிறகு அல்லாஹ் அவர்களுக்கு தனது அருட்களை வழங்கி உறுதிப்பாட்டையும் வழங்கி விட்டான்.

இந்தியாவிலிருந்து சலீம் சாஹிப் என்ற இன்ஸ்பெக்டர் எழுதுகிறார்:

ஜெய்ப்பூரில் ஓர் அஹ்மதி நண்பர். இவர் தனியார் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருக்கிறார். கடந்த ஆண்டு இவரிடம் வக்ஃபே ஜதீது சந்தா பற்றி கூறப்பட்டது. உங்கள் வாக்குறுதி உங்கள் வருமானத்தின் அடிப்படையில் 5000 ரூபாய் ஆகும் என்று கூறப்பட்டது.

அவர் கூறினார்: நான் ஒரு சாதாரண தனியார் பள்ளிக்கூடத்தின் ஆசிரியர். எவ்வாறு நான் அவ்வளவு தொகை கொடுப்பேன் என்றார். எவ்வாறிருப்பினும், அவரிடம் அல்லாஹ் வாய்ப்பு வழங்குவான் என்று கூறப்பட்டது. இவ்வருடம் மீண்டும் அவரை சந்திக்கச் சென்றபோது அவர் அந்த பள்ளிக்கூடத்தில் பிரின்ஸிபல் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். சந்தாவின் காரணமாக எனக்கு அல்லாஹ் எவ்வளவு பரக்கத் வழங்கினான் என்றால் நான் இந்த பள்ளிக்கூடத்தை வாங்கி விட்டேன் என்றார்.

பிறகு இவ்வருடம் உங்கள் வாக்குறுதியை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஏனெனில் அல்லாஹ் உங்களை மேலும் பள்ளிக்கூடம் வாங்குவதற்கு வாய்ப்பு தந்துள்ளான் என்றதும் அவர் கூறினார். இன்னொரு பள்ளிக்கூடம் வாங்குவதற்கும் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. உரிமையாளர் வந்து சாவியை வாங்கிக் கொள்ளுமாறு கூறியுள்ளார் என்று கூறினார்.

இன்ஸ்பெக்டர் சாஹிப் எழுதுகிறார்: இப்போது அவரிடம் நான்கு பள்ளிக்கூடங்கள் இருக்கிறது. அவரது வீடு முதலில் சிறியதாக இருந்தது. அதன் கூரை இரும்புத் தகட்டால் உருவாக்கப்பட்டிருந்தது. இப்போது அவரது வீடு மூன்று மாடிகளைக் கொண்டது. அதன் ஒரு தளத்தை அவர் ஜுமுஆ தொழுகைக்காக வைத்துள்ளார். இந்த அருள் முழுக்க முழுக்க இறைவழியில் செலவு செய்ததன் விளைவாகும். இதனால் இவரது ஈமானும் வளர்ந்துள்ளது.

லைபீரியாவின் அமீர் சாஹிப் எழுதுகிறார்:

டிசம்பரில் எமது தப்லீக் குழு சோக்கர் டவுண் (Sookar Town) என்று பெயர் பெற்று ஊருக்கு சென்றது. அவ்வூர் நகரத்திலிருந்து தூரம் அதிகம் இல்லைதான். ஆனால் தற்காலத்தின் எந்த வசதியும் அங்கு இல்லை. பாதையும் மோசம். வழியில் பலகை மற்றும் கயிறுகளால் ஆன பாலமும் உள்ளது. அதில் கடந்து செல்ல வேண்டியது வரும். தொழுகைக்கு பிறகு தப்லீக் செய்யப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய செய்தி எடுத்துக் கூறப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கம் மற்றும் கொள்கை பற்றி கூறப்பட்டது.

அவ்வூரின் ஒரு வயது முதிர்ந்த பெரியவர் உஸ்மான் சாஹிப் எழுந்து ஒரு கனவைப் பற்றி கூறினார். நான் சில நாள்களுக்கு முன் பார்த்தேன். வானம் விழுந்து விட்டது. எல்லா மக்களும் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் வழியில் ஒரு வண்டி நிற்கிறது. அதில் வெள்ளை நிறத்தில் மக்கள் இருக்கிறார்கள். எங்களிடம்

வாருங்கள். உங்களுக்கு அமைதி தருவோம் என்று குரல் கொடுக்கிறார்கள். உடனே கனவு முடிந்து விட்டது. நான் யோசனையில் ஆழ்ந்து விட்டேன். எப்படி நடக்கும்? இதற்கு என்ன பொருள்? நீங்கள் வந்ததில் எனக்கு புரிந்து விட்டது. இதுதான் கனவின் பொருள். நான் மிகவும் வயது முதிர்ந்து விட்டேன். வாழ்வில் முதன்முதலில் ஆப்பிரிக்கர் அல்லாதவர்கள் வெள்ளை மனிதர்களிடம் வந்து தப்லீக் செய்யக் காண்கிறேன்.

உடனே அங்கிருந்த அனைவரும் ஜமாஅத்தில் இணைவதற்கு முடிவெடுத்தனர். பைஅத் செய்தனர். இது வக்ஃபே ஜதீதின் ஆண்டின் கடைசி பகுதியாகும். சந்தாவில் கவனம் செலுத்துங்கள் என்று கூறப்பட்டது. அவர்கள் பைஅத் செய்த பிறகு சந்தா பற்றி கூறப்பட்டது. உடனே சந்தாவும் செலுத்தினர். அவர்களின் ஈமான் மற்றும் களங்கமின்மை வளர்ந்து கொண்டிருக்கிறது.

கனடாவின் சத்ர் லஜ்னா கூறுகிறார்:

ஒரு மஜ்லிஸில் சுற்றுப் பயணத்தின்போது கூறப்பட்டது. ஒரு பெண்ணின் 12 வயது சிறுமிக்கு பள்ளிக்கூடத்திலிருந்து 80 டாலர் பரிசு கிடைத்தது. அவர் அதனை தனது விருப்பத்தின்படி செலவு செய்ய விரும்பினார். வக்ஃபே ஜதீது செயலரின் தூண்டுதலின்படி அப்பெண் அந்தத் தொகை முழுவதையும் சந்தாவாக கொடுத்து விட்டாள். அவர் கூறுகிறார்: அல்லாஹ் எனக்கு எவ்வாறு அருள் புரிந்தான் என்றால் மறுநாள் அப்துஸ் ஸலாம் Science Paper –ல் அவருக்கு முதல் தரம் கிடைத்தது. அதன் மூலம் அல்லாஹ் அந்த சிறுமியின் ஈமான் மற்றும் கொள்கையில் பிடிமானத்தை ஏற்படுத்தினான்.

தற்காலத்தில் சில சிறுவர்கள் ஒரு கேம் விளையாடுகின்றனர். Fortnite என்பது அதன் பெயர். அதில் தமது பணத்தை இழக்கிறார்கள். பெற்றோர்கள் அதனை தடுக்க வேண்டும். குத்தாமுல் அஹ்மதிய்யா, அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவும் குறிப்பாக இதனை தடுக்க வேண்டும். இல்லையென்றால் ஒன்றிலிருந்து அடுத்த நிலைக்கு செல்வதற்கு கார்டு எடுப்பார்கள். செலவு செய்வார்கள்.

கடந்த நாட்களில் நான் ஒரு கட்டுரையில் படித்தேன். அவர்கள் ஒரு குழுவாக உள்ளனர். சிறுவர்களைச் சந்தித்து அவர்களை குழப்புகின்றனர். கார்டு வாங்குமாறு கூறுகின்றனர். அந்த சாக்கில் பெற்றோரின் அக்கவுண்ட் நம்பரை வாங்குகின்றனர். சில நாட்களுக்குப் பிறகுதான் பெற்றோருக்கு தமது அக்கவுண்டில் பணம் இல்லை என்பது தெரிய வருகிறது. இந்த கேமில் சிறுவர்களுக்கு போதை போன்று வழக்கம் ஏற்படுகிறது. இதனால் அவர்களின் நேரம் மட்டும் வீணாவதில்லை. தவறான சிந்தனை உருவாகிறது. இத்துடன் சில பெற்றோர்களுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. இதிலிருந்து தப்பிக்க வேண்டும்.

அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள் என்று அல்லாஹ் கவனமூட்டியுள்ளான். இதனை சிறுவர்களிடம் கவனமூட்ட வேண்டும். குறிப்பாக வக்ஃபே ஜதீது சந்தாவின் பக்கம் கவனமூட்ட வேண்டும்.

இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தின் இன்ஸ்பெக்டர் சாஹிப் எழுதுகிறார்:

ஒரு புத்தாக்க வகுப்பு நடத்தப்பட்டது. நானும் நாயிப் மால் வக்ஃபே ஜதீது இருவரும் கலந்து கொண்டோம். நாயிப் நாஸிம் மால் உள்ளூர் முஅல்லிம் வீட்டில் கூறினார். நடப்பு வருடம் கேரளாவில் கடும் வெள்ளம். எனவே வக்ஃபே ஜதீது சந்தாவின் வசூலில் பிரச்சனை ஏற்படலாம். இதனை கூறி விட்டு அவர் முஅல்லிம் சாஹிப் வீட்டிலிருந்து புறப்பட்டு அவரது குழந்தைகளுக்கு அன்பளிப்பாக நூறு நூறு ரூபாய்கள் வழங்கினார். சிறிது காலத்திற்குப் பிறகு அந்த ஜமாஅத்திற்கு சுற்றுப் பயணம் சென்றபோது முஅல்லிம் சாஹிப் உடைய குழந்தைகள் தமக்கு கிடைத்த அந்த நூறு நூறு ரூபாய் அன்பளிப்புகளை வக்ஃபே ஜதீது சந்தாவில் வழங்கி விட்டு, கேரளாவின் நிலை மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எமது தரப்பிலிருந்து இந்த சந்தாவை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினர். சிறு வயதில் அவர்களின் உள்ளத்தில் சந்தாவின் முக்கியத்துவம் அதிகம் இருந்தது.

யூ.கே ஜமாஅத்தின் ஒரு லஜ்னா கூறுகிறார்:

எனக்கு 2010 –ல் ஜமாஅத்தை ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் வீட்டிலிருந்தும் வெளியேற்றப்பட்டேன். அப்போது எனக்கு பணியும் இல்லை. சந்தா கொடுக்க முடியவில்லையே என்ற பெரும் வெட்கம் ஏற்பட்டது. ஆனால் புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு முதல் வருடமே சந்தா கொடுப்பது கண்டிப்பும் இல்லை.

அவர் கூறுகிறார்: எனக்கு கவலை இருந்தது. எவ்வாறிருப்பினும் நான் வாக்குறுதி கொடுத்தேன். எனக்கு பணம் கிடைக்கும்போது பைஅத் செய்த நாளிலிருந்து கணக்கிட்டு சந்தா கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். சில மாதங்களுக்குப் பிறகு எனக்கு வேலை கிடைத்தது. சந்தாக்கள் கொடுக்க ஆரம்பித்தேன். சந்தாவின் அருளால் ஒரு வருடத்தில் மூன்று முறை எனது சம்பளத்தில் உயர்வு ஏற்பட்டது. சிறிது காலம் கழித்து, தொடர்பை துண்டிருந்த எனது பெற்றோர் என்னுடன் தொடர்பு கொண்டனர். நல்ல தொடர்பு ஏற்பட்டது. எனக்கு திருமணமும் ஆகி விட்டது. எனக்கு அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொன்றும் கிடைத்து விட்டது.

லைபீரியாவின் கேப் மவுண்டின் (Cape Mount) உள்ளூர் முஅல்லிம் கூறுகிறார்:

நிக்பீனா ஜமாஅத்தில் வக்ஃபே ஜதீது சந்தா பற்றி கூறப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு ஒரு களங்கமற்ற பெண் மோஸோ குமாரா சாஹிபா கூறினார். நீங்கள் பொருள் தியாகம் பற்றி கூறி வக்ஃபே ஜதீது சந்தாவை குறிப்பிட்டபோது அனைவரும் சந்தா கொடுத்தனர். என்னிடம் எதுவும் இல்லை. இதனால் அதில் எனக்கு கொடுக்க இயலவில்லை. கடந்த இரவு நான் கனவில் கண்டேன். நீங்கள் திரும்பவும் வந்துள்ளீர்கள். நான் நூறு லைபீரியன் டாலர் சந்தா கொடுக்கிறேன்.

நான் காலையில் எழுந்த போது என்னிடம் பணம் இல்லை. எவ்வாறு நடக்கும்? என்று நினைத்தபோது அல்லாஹ்வின் அருள் இவ்வாறு நடந்தது. சிறிது நேரத்தில் ஒரு மனிதர் வந்தார். 500 லைபீரியன் டாலர் கொடுத்து, எனது மகள் எனக்கு கொடுத்தாகக் கூறினார். அப்பெண்ணின் மகள் கொடுத்து அனுப்பியுள்ளார். இவ்வாறு அவரது கனவை நிறைவேற்றியவாறு தனது நூறு லைபீரியன் டாலர் சந்தாவைக் கொடுக்க வந்திருந்தார்.

பெண்கள் சில நேரங்களில் சந்தா கொடுப்பதில் ஆண்களை விட அதிகம் உள்ளனர். ஆண்களை சீர்திருத்தி செலுத்த வைக்கின்றனர். இதன் முக்கியத்துவத்தை ஆண்களை விட அதிகம் உணர்கின்றனர்.

கினிகுனாகரியின் அபூபக்கர் சாஹிப் எழுதுகிறார்:

இவர் ஒரு ஜமாஅத்தின் சதர். விவசாயத்துடன் தொடர்பு உடையவர். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஜமாஅத்தின் முபல்லிக் மற்றும் முஅல்லிம்கள் ஜமாஅத்தின் சந்தா உடைய முக்கியத்துவத்தை எனக்கு எடுத்துக் கூறி வந்தனர். நான் மிகக் குறைந்த அளவே பணம் வழங்கி வந்தேன். ஆனால் எனது மனைவி இதில் மிகவும் பேணுதலாக இருந்தார். எப்போதும் முறையாக சந்தா கொடுத்து வந்தார். என்னையும் சந்தாவின் பக்கம் கவனமூட்டி வந்தார். நான் அப்போதெல்லாம், பைசா அதிகம் இருந்தால் சந்தா

கொடுப்பேன் என்று கூறி அவளை நிறுத்தி விடுவேன். அல்லாஹ்வின் உரிமையை செலுத்தினால்தான் அதிகம் பணம் கிடைக்கும் என்று அவர் கூறுவார். இவ்வாறு எனது மனைவி வலுக்கட்டாயமாக என்னை சந்தா கொடுக்க வைப்பார். நான் விகிதாச்சாரப்படி முழுமையாக சந்தா கொடுக்க ஆரம்பித்ததும் என் மீது அல்லாஹ்வின் அருள் மழையைப் போன்று இறங்கக் கண்டேன. விவசாயத்தில் என்னை விட அதிகம் படித்து பட்டம் வாங்கியவர்களின் விவசாயத்தில் பெரும் விளைச்சல் இருக்கவில்லை. அவ்விளைச்சலை இந்த அறிவற்றவனுக்கு அல்லாஹ் வழங்கினான்.

ஐவரிகோஸ்ட் மண்டலத்தின் முபல்லிக் எழுதுகிறார்:

ஒரு நண்பர் ஸாபுலூ சாஹிப். அவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்கும் பாக்கியம் கிடைத்தது. அவர் பைஅத்திற்குப் பிறகு தொடர்ந்து முறையாக குத்பா கேட்பார். உணர்வுமிக்க தாயீ இலல்லாஹ் – அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவராக இருந்தார். செலவு செய்து ஜமாஅத் நூல்களை வாங்கி அஹ்மதி அல்லாதவர்களுக்கு கொடுப்பார். ஸாபுலூ சாஹிப் ஒரு ஹோட்டலில் பணி செய்தார். நல்ல பதவியில் இருந்தார். இப்போது வேலை இல்லை. அவரது மனைவிதான் அவருக்கு வீட்டுச் செலவிற்கு உதவி செய்து வந்தார்.

சில நாட்களுக்கு முன் போனில் கூறினார். நான் 30 ஆயிரம் ஃபிராங்க்ஸிபா வக்ஃபே ஜதீது சந்தாவாக அனுப்புகிறேன் என்றார். நான் அவரிடம் உங்கள் நிலை நன்றாக இல்லையே? எனவே நிச்சயமாக சற்று குறைவாகக் கொடுங்கள். இது உங்களுக்கு மிகவும் அதிகமாகும். ஆண்டு மாநாடு வேறு வருகிறது என்று கூறினேன். அவர் கூறினார்: நான் 20 ஆயிரம் ஃபிராங்க்ஸிபா கொடுக்கத்தான் விரும்பினேன். எனது மனைவி 30 ஆயிரம் ஃபிராங்க்ஸிபா கொடுக்க வேண்டும் என்று அடம்பிடிக்கிறார் என்றார். பிறகு அல்லாஹ்வின் அருளால் ஆண்டு மாநாட்டிற்கும் வருகை தந்தார். இவ்வாறு பல இடங்களில் பெண்கள் ஆண்களை விட அதிகம் தியாகம் செய்கின்றனர்.

ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் சதர் கூறுகிறார்:

ஒரு களங்கமற்ற நண்பர் வக்ஃபே ஜதீது சந்தா கொடுத்து விட்டார். 20 டிசம்பர் அன்று மக்களுக்கு பாக்கிகளை வழங்குமாறு மீண்டும் ஒருமுறை குறிப்பாக கவனமூட்டப்பட்டது. இவரிடம் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர் பெரும் தொகை எடுத்து வந்தார். மறுநாள் மாலை அவரிடமிருந்து போன் வந்தது. உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார். எளியவன் வக்ஃபே ஜதீது சந்தா வழங்கினேன். அல்லாஹ் ஒரே நாளில் அதனை முழுமையாகக் கொடுத்து விட்டான். நான் மூன்று வருடமாக ஒரு போர்டிங் அவே நடத்துகிறேன். கடந்த மூன்று வருடமாக ஒருநாள் கூட இவ்வளவு கஸ்டமர் வரவில்லை. இன்று சந்தா கொடுத்த பிறகு வந்தனர் என்றார்.

இவ்வாறு இந்தோனேஷியாவின் ஒரு சம்பவம். அவர்களின் ஈமானில் நிலைத்து நிற்றலைப் பார்க்கும்போது வியப்பு ஏற்படுகிறது. இந்தோனேஷியாவில் ஒரு புதிதாக பைஅத் செய்தவர். 2016 –ல் பைஅத் செய்திருந்தார். பைஅத்திற்குப் பிறகு இவரது குடும்பத்திற்கு அக்கம் பக்கத்தவர் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஒருநாள் இவரது குடும்பத்தின் பலர் வந்து இவரை நன்றாக அடித்தனர். ஜமாஅத்தை விட்டு விடுமாறு வலியுறுத்தினர். முபல்லிகை சந்திக்க விடாமல் கட்டுப்பாடு விதித்தனர். இவர் யாருக்கும் தெரியாமல் சென்று சந்தித்தார்.

நமது முபல்லிக் அவரிடம் கூறினார்: ஜமாஅத்திற்கு வந்தால் தியாகம் செய்ய வேண்டியது வருகிறது. அவர் நான் தியாகம் செய்வேன் என்றார். எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் சரி என்றார். அவரிடம் சந்தா மற்றும் பொருள் தியாகம் பற்றி கூறப்பட்டது. இவர் பைஅத் செய்த ஒரு மாதத்திலேயே சந்தாவை வழங்கத் தொடங்கி விட்டார். நிரந்தர வேலை இல்லை. இருந்தும் கிடைத்த வேலையில் எவ்வளவு கூலி கிடைத்ததோ அதிலிருந்து சிறிது தொகையை சந்தாவுக்காக எடுத்து வைத்து மக்களை விட்டு மறைந்து இரவில் மிஷன் ஹவுஸ் வந்து அதுவும் மிஷன் ஹவுஸ் வரும் முன் மக்கள் தாம் மிஷன் ஹவுஸ் செல்வது தெரியாமல் இருப்பதற்காக சுற்றிப் போய் மிஷன் ஹவுஸ் வந்து சந்தா கொடுப்பார். ஜமாஅத்துடன் தொடர்பும் வைத்துக் கொள்வார்.

இன்னொரு சம்பவம். இவர் அஹ்மதி அல்ல. இவரது சம்பவமும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து எவ்வாறு தூண்டுதல் வழங்கப்படுகிறது என்று காட்டக் கூடியதாகும். மாலி ஜமாஅத்தின் முபல்லிக் எழுதுகிறார்:

வக்ஃபே ஜதீது சந்தா பற்றி ரேடியோ அஹ்மதிய்யாவில் எனது ஒரு குத்பா ஓடிக் கொண்டிருந்தது. கடந்த வருட குத்பாவின் ரிக்கார்டிங் ஓடிக் கொண்டிருந்தது. நகரத்திலிருந்து 45 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த ஒரு ஊரின் சீஃப் போன் செய்து தப்லீக் செய்யுமாறு அழைப்பு விடுத்தார். நாங்கள் தப்லீகிற்காக சென்றதும் அந்த சீஃப் மிகவும் உணர்வுடன் கூறினார். காலத்தின் கலீஃபா வக்ஃபே ஜதீது சந்தா பற்றி பல்வேறு பகுதிகளில் ஈமானை வலுவூட்டும் சம்பவங்களைக் கூறுகிறார்கள். அதனைக் கேட்டு ஊரில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அஹ்மதிகள் இதனை டி.வி –யில் பார்க்கின்றனர். ஏன் இன்னும் இந்த தூய திட்டத்தில் இணையவில்லை? அவர், உங்களை போன் செய்து அழைத்தேன் என்றார்.

பிறகு தப்லீக் நிகழ்ச்சியும் நடந்தது. அல்லாஹ் அருளால் அன்று 85 பேர் அஹ்மதிய்யத்தை ஏற்றனர். அவ்வூர் மக்கள் பல ஆயிரம் ஃபிராங்க்ஸிபா வக்ஃபே ஜதீது சந்தாவாக எடுத்து வைத்தனர். அல்லாஹ் பல்வேறு முறையில் தகுதி வாய்ந்த மக்களுக்கு தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்கின்றான். உதவியாளர்களையும் உருவாக்குகின்றான்.

பெனின் மண்டலத்தின் முபல்லிக் எழுதுகிறார்:

லோகோசா (Lokossa) என்ற ஒரு ஜமாஅத்தில் வக்ஃபே ஜதீது சந்தா பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அங்கு மண்டல மாநாடும் நடக்கவிருந்தது. அதனைப் பற்றியும் வக்ஃபே ஜதீது பற்றியும் கூறப்பட்டது. ஜமாஅத்தின் கப்பார் சாஹிப் வந்து கூறினார். நான் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறிது தொகை வைத்துள்ளேன். ஆனால் சந்தா வழங்குவதும் அவசியமாகும். என்ன செய்வது? என்றார்.

உடனே நாங்கள் அவரிடம் ஜல்ஸாவில் கலந்து கொள்ளுங்கள். சந்தாவை பிறகு தாருங்கள் என்று கூறினோம். சில நாள்கள் கழிந்து என்னை சந்தித்து சிறிது தொகையைக் கொடுத்தார். இது எனது சந்தா வாங்கிக் கொள்ளுங்கள் என்றார். நான் செகரட்டரி மாலிடம் இவருக்கு ரசீது கிழித்துக் கொடுங்கள் என்றேன். செகரட்டரி மால் கூறினார்: ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக வைத்திருந்த தொகையை சந்தாவாகக் கொடுத்து விட்டார்.

பிறகு அவர் மனைவி மக்களுடன் 15 கிலோ மீட்டர் நடந்து வந்து ஜல்ஸாவில் கலந்து கொண்டார். இத்தகைய மக்களைத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ் அவனது ரஸூல் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கேட்கிறார்கள். பிறகு அவர்கள் தமது மனத்தூய்மைக்கான ஏற்பாட்டைச் செய்கின்றனர். எந்த தியாகத்திற்கும் தயாராக இருக்கின்றனர்.

இம்மக்கள்தான் உண்மையில் பைஅத்தின் உரிமையைச் செலுத்துபவர்கள் ஆவர். அறிவுக்குருடர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. அவர்களுக்கு இது தெரிய வேண்டும். இந்த களங்கமின்மையும் பற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் தந்த வாக்குறுதிக்கு ஆதாரம் இல்லையா? இவர்களின் அறிவின் மீது திரை உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டதற்கு இதுவே பெரும் அடையாளமாகும். இதுவே அதனை நிரூபிக்க போதுமானது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனையை உலகில் மேற்கொண்டு பரப்புவதற்காக வந்தார்கள். இந்த முஸ்லிம்களுக்கு அறிவு இருந்தால் அந்தோ! அறிவு இருந்தால் புரிவார்கள் எனில் அல்லாஹ்வின் அருளால் இஸ்லாம் உலகில் வெற்றி பெறும். இஸ்லாத்திற்கு எதிராக அவப்பெயர் ஏற்படுத்தும் செயல்களுக்கு முற்றிலும் மாற்றமாக நாம் பிறகு பார்ப்போம். ஆனால் எவ்வாறிருப்பினும் நமது பணி நம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் முன் குனிய வேண்டும். அதிகமதிகம் தப்லீகின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தியாகத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இஸ்லாத்தின் உண்மையை உலகிற்கு தெளிவுபடுத்துங்கள். இப்போது நான் சில பட்டியலை எடுத்து வைக்கிறேன்.

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் 61 –வது வருடம் 31 டிசம்பவர் 2018 உடன் நிறைவடைகிறது. அதில் ஜமாஅத் மக்களுக்கு 91 இலட்சத்து 34 ஆயிரம் பவுண்டு தியாகத்தை எடுத்து வைக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இது கடந்த வருடத்தை விட 2 இலட்சத்து 71 ஆயிரம் பவுண்டு அதிகமாகும்.

பாகிஸ்தான் தனது இடத்தைத் தக்க வைத்துள்ளது. அது முதலிடம். அதுபோக முதல் 10 நாடுகள். முதலில் பிரிட்டன். தஹ்ரீகே ஜதீதில் ஜெர்மனி முதல் இடத்தில் இருந்தது. பிரிட்டன் அமீர் சாஹிப் வக்ஃபே ஜதீதில் முதலிடம் வருவோம் என்றார். இப்போது கணிசமான வித்தியாசத்துடன் மேலே வந்துள்ளார்கள். அல்லாஹ் ஜமாஅத் அன்பர்களின் பொருளிலும் உயிரிலும் மென்மேலும் பரக்கத்தை வழங்குவானாக. வருங்காலத்திலும் அதிகரிக்க வாய்ப்பு வழங்குவானாக.

இரண்டாவது இடம் ஜெர்மனி, பிறகு அமெரிக்கா, அடுத்து கனடா. அமெரிக்காவுக்கு கூறிக் கொள்வேன். அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் சிறிது வித்தியாசமே உள்ளது. அதிகம் முயற்சி செய்யவில்லை என்றால் மூன்றாவது இடத்தையும் விட்டு கீழே போய் விடக் கூடும். நான்காவது இடம் கனடா, ஐந்தாவது இடம் இந்தியா, பிறகு ஆஸ்திரேலியா, பிறகு இந்தோனேஷியா, பிறகு மத்தியக் கிழக்கு நாடு, அடுத்து கானா அடுத்து மத்தியக் கிழக்கு நாடு ஒன்று.

தனி நபர் விகிதாச்சாரப்படி அமெரிக்கா முதலிடம், அடுத்து சுவிட்சர்லாந்து, அடுத்து ஆஸ்திரேலியா.

ஆப்பிரிக்காவில் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதலிடம் கானா. மொரீஸியஸ், பிறகு நைஜீரியா, தன்ஸானியா, ஃபுர்கினோபாஸோ, பெனின்.

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீது இவ்வருடம் 17 இலட்சத்து 32 ஆயிரம் பேர் பங்கெடுத்துள்ளனர். இது கடந்த வருடத்தை விட ஒரு இலட்சத்து 23 ஆயிரம் அதிகமாகும். மக்கள் எண்ணிக்கையை அதிகமாக்குவதில் அதிகம் பணி செய்த நாடு நைஜர். பிறகு நைஜீரியா, சிராலியோன், கேமரூன், பெனின், கேம்பியா, கோங்கோ குன்சாஷா, தன்ஸானியா, லைபீரியா, செனிகால் ஆகியவை அடங்கும்.

வக்ஃபே ஜதீதில் பருவ வயதை அடைந்தவர்கள் மற்றும் சிறியவர்கள் என தனித்தினியாக சந்தா கணக்கெடுக்கப்படுகிறது. குறிப்பாக பாகிஸ்தானிலும், கனடாவிலும் ஆரம்பமாகி உள்ளது. பாகிஸ்தானில் முதல் 3 ஜமாஅத் 1) லாஹூர் 2) ரப்வா 3) கராச்சி.

மாவட்ட அளவில் ஸியால்கோட், இஸ்லாமாபாத், பைஸலாபாத், ராவல்பிண்டி, சர்கோதா, குஜ்ரான்வாலா, முல்தான், ஹைதராபாத், மீர்பூர்காஸ், டேராகாஸிகானி.

அத்ஃபாலில் முதல் பெரிய ஜமாஅத்துகள் பாகிஸ்தானில் 1) லாஹூர் 2) கராச்சி 3) ரப்வா. மாவட்ட அடிப்படையில் இஸ்லாமாபாத், சியால்கோட், ராவல்பிண்டி, சர்கோதா, குஜ்ரான்வாலா, ஹைதராபாத், டேரா காஸிகான், செக்பூர், உமர்கோட்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பிரிட்டனின் 10 ஜமாஅத்துகள்: வெஸ்டர்பார்க், மஸ்ஜிது ஃபஸ்ல், பர்மிங்கம் சவூத், ஜெலிங்கம், பர்மிங்கம் வெஸ்ட், இஸ்லாமாபாத், ஹோஸ், பிரட்போர்ட் நார்த், நியூமார்டன்.

மண்டல அடிப்படையில் இலண்டன் பி முதலிடம். இலண்டன் ஏ, மிட்லண்ட், நார்த் ஈஸ்ட், மிடில்ஸுக்ஸ். அத்ஃபால் தப்தர் அடிப்படையில் பிரிட்டன் முதலிடம். பிரட்போர்ட் சவூத், சர்பிட்ன், கிளாஸ்கோ, ருவான்டன், இஸ்லாமாபாத், குவாண்டன்வெல், ருவான்டன் ரிச்சன்பார்க், பெடர்ச்சில் மார்டன் மேனர், மார்க்கிரண்ட்.

ஜெர்மனியின் 5 உள்ளூர் இமாரத்துகள்: ஹேப்பல், பிராங்க்ஃபர்ட், நிஸ்பாதர்ன், மோல் பில்டன், கால்டோவன், டோஸ்டன்பர்க்.

வசூலின் அடிப்படையில் அமெரிக்காவின் முதல் 10 ஜமாஅத்துகள்: சிலிகோன்வேலி, ஸ்யாட்ரல், டெட்ராய்டு, யுவர்ஸ்பிரிங்க், சென்டர் வர்ஜீனியா, போஸ்டன், பெர்லஸ், லாரல், பர்ஜியா, கெர்லைன், யார்க்.

பிறகு வசூலின் அடிப்படையில் கனடாவின் இமாரத்துகள்: வான், கல்கேரி, பீஸ்வில்லேஜ், கிராம்சன், கிராம்கோ. பத்து பெரிய ஜமாஅத்துகள்: தர்ஹம் விரின்சர், பிரங்போர்ட், அட்மிண்டன் வெஸ்ட், ஸில்லட்டோன் நார்த், ஸிஸ்டகுன் சவூத், மாண்ட்ரியல் வெஸ்ட், மில்டன் வெஸ்ட், அமில்டண்ட் வெஸ்ட், அய்வரிஸ்போல்ட். தஃப்தர் அத்ஃபாலின் ஐந்து நிலைகளைப் பெற்றவை: டிர்ஹம், மிட்ன்வெஸ்ட், பிரட்போர்ட், மிஸ்டர்ன் சவூத், ஸில்டகோன்.

இந்தியாவின் வசூலின் அடிப்படையில் மாநில வாரியாக கேரளா, ஜம்மு காஷ்மிர், கர்நாடகா, தெலுங்கானா, தமிழ்நாடு, ஒடிசா, மேற்கு வங்காளம், பஞ்சாப், டெல்லி, உத்திரபிரதேசம். வசூலின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்: ஹைதராபாத், காதியான், பத்தபிரியம், காலிகட், கல்கத்தா, பெங்களூர், சென்னை, கருளாயி, சிரிநகர், டெல்லி.

ஆஸ்திரேலியாவின் வசூலின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்: காஸல் ஹில், மெல்பெர்ன், லாங் வாரன், சவுத் மெல்பெர்ன், பெரவிக் மாய்டன்பர்க், பிரிஸ்பன் சவூத், பிர்ஸ்பன் லுகான், கான்பெரா, பிரிங்க்டன்.

அத்ஃபால் கணக்கின்படி ஆஸ்திரேலியா ஜமாஅத்துகள்: பெஸித், அடிலெய்டு சவூத், பெரிஸ்பன் லாகான், மெல்பர்ன், லாங்வர்ன், மெல்பர்ன் பெராவிக், பிரிஸ்பன் சவுத், மாஸ்டிரின் பார்க், மவுண்ட்ரேட், காஸல்ஹில், மெல்பர்ன் ஈஸ்ட்.

உருதுவில் பெயர் எழுதப்பட்டுள்ளது. எனவே சொல்வதில் தவறு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் உள்ளூர் ஜமாஅத்துகளுக்கு செய்தி கிடைத்திருக்கும். அல்லாஹ் கலந்து கொண்ட அனைவருக்கும் உயிரிலும் பொருளிலும் பரக்கத்தை வழங்குவானாக. வருங்காலத்தில் உயரிய தியாகங்களைச் செய்ய வைப்பானாக.

124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொற்களும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்த கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்பின் மூலம் தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

**நான் இந்த நகரத்தில் அதாவது காதியானில் இறைவனைப் பார்த்து விட்டேன். நான் இஸ்லாத்தின் அனைத்து முன்னறிவிப்புகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான தொண்டரின் கைகளில் முழுமையடைவதைக் கண்டேன்**

**மஹ்திக்கான வாதம் செய்த பலர் உலகத்தில் வந்துள்ளனர். அவர்கள் தமது பிரச்சாரத்தை உலகில் பரப்புவதற்காக முன்னறிவிப்புகளை செய்தனர். ஆனால் ஒருவரைத் தவிர வேறெவரது கூற்றும் நிறைவேறவில்லை. மேலும் அந்த நபர் பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரது கல்லறையில் " வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இமாம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியின் அருளுக்குரிய கல்லறை என்று எழுதப்பட்டுள்ளது"**

**நான் அஹ்மதிகளின் பிரசுரங்களைப் படித்தேன். மேலும் அஹ்மதி முஸ்லிம்களை சந்தித்து அஹ்மதிய்யத்தான் உண்மையான இஸ்லாம் என்றும் அஹ்மதிகள் மற்ற முஸ்லிம்களை விடவும் அதிக உண்மையாளர்களும் உண்மையான முஸ்லிம்களும் ஆவர் என்ற இந்த முடிவை எட்டினேன்**

**மேலும் எத்தனை நூற்றாண்டுகள் கழியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் காதியானிலிருந்து உரத்த குரலில் எழுப்பப்படுகின்ற அந்த முழக்கமே உலகத்தில் கேட்கும் என்பதை நான் நன்கறிவேன்**

### காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட புதிய அஹ்மதிகளின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்

**உலகத்தில் ஜமாஅத் பரப்பி வருகின்ற அமைதிக்கான தூதுச் செய்தி போற்றத்தக்கதாகும். நான் ஹுஸூர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் உலகத்தில் அமைதியை பரப்புகின்றார்கள். உங்களது ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் முழு உலகத்திலும் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் போதனையை வழங்குகின்றார்கள். மேலும் முழு உலகையும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்**

**முஸ்லிம் சமுதாயம் எப்போதும் சீக்கிய சமுதாயத்தை ஏற்றுக் கொண்டவர்களோடு அனுதாபத்தோடு நடந்து கொண்டுள்ளது. முஸ்லிம் சமுதாயம் ஒவ்வொரு கஷ்டமான நேரத்திலும் எங்களுக்கு உதவி செய்துள்ளது. இந்த இரண்டு சமுதாயங்களின் சிறப்புத்தன்மை என்னவென்றால், இவர்கள் தனித்தவனும், இணையற்றவனுமாகிய இறைவனை வணங்குகின்றனர்**

**உலகத்தில் மனிதத்துவத்தின் முழக்கத்தை முழங்குகின்ற மாநாடுகள் மிகக் குறைவாகவே நடைபெறுகின்றன. மனித இனத்திற்கு தொண்டு செய்வது மிகப்பெரிய வியக்கத்தக் பணியாகும். அதை ஜமாஅத் செய்து வருகின்றது**

**இன்று எத்தகைய சிறப்பான முறையில் அன்பு மற்றும் அமைதியின் தூதுச் செய்தியை ஜமாஅத் தரப்பிலிருந்து வழங்கப்படுகின்றதோ அது போற்றத்தக்கதாகும்**

### காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட சில அரசியல் மற்றும் மார்க்கத் தலைவர்களின் தாக்கங்கள்

**தகவல்: மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர் (அறிக்கைத் துறை)**

- 48 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர்
- 18,864 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர்
- ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,345 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்
- தஹஜ்ஜுது தொழுகை
- திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல்
- கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள்
- மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு
- கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள்
- நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு
- ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது
- பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது
- 34 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது
- அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ்
- அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது
- 19 முதல் 21 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான اِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِیْحُ جَآءَ الْمَسِیْحُ MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது
- 3 முதல் 5 ஜனவரி வரை *"The Messiah of the Age"* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி MTA –வில் ஒளிபரப்பப்பட்டது

காதியான் ஆண்டு மாநாடு ''புஸ்தானே அஹ்மது'' என்ற பெயரிலுள்ள பரந்த மாநாட்டுத் திடல் வளாகத்தில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெற்று, சிறப்பான முறையில் அதன் நிறைவை எட்டியது. மாநாட்டில் 48 நாடுகளிலிருந்து கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 18864 ஆகும். மாநாட்டிற்கான ஆயத்தம் வெகு நாட்களுக்கு முன்னதாகவே ஆரம்பமாகி விடுகின்றது. டிசம்பர் மாதத்தின் துவக்கத்திலேயே இது தொடர்பான பணிகள் ஆரம்பமாகியிருப்பதை நாம் வெளிப்படையாகவே காண இயலும்.

வீடுகள், வழிப் பாதைகள், தெருக்கள் மற்றும் முஹல்லாவைச் சுத்தமாக வைப்பதில் குறிப்பான கவனம் வைக்கப்படுகின்றது. வகாரே அமல் மூலமாக காதியான் முழுவதும் சுத்தமாக இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. மின்சாரம் மற்றும் ஒளிக்கான ஏற்பாடு செய்கின்ற துறையின் சார்பாக சாலைகளிலும் தெருக்களிலும் ஒளிவிளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. பெஹஸ்தி மக்பரா, தாருல் மஸீஹ், மஸ்ஜிது முபாரக், மஸ்ஜிது அக்ஸா மற்றும் மினாரத்துல் மஸீஹ் மின் விளக்குகளால் புது மாப்பிளையைப் போன்றுஅலங்கரிக்கப்ட்டிருந்தன. அந்தக் காட்சி மிகவும் அழகாகவும் உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் இருந்தது. ஆண்டு மாநாட்டின் நாட்கள் அருகில் வர வர காதியான் தாருல் அமானின் பொலிவு அதிகரித்தது.

**பணியாளர்கள் தொடர்பான ஆய்வும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளும்**

24 டிசம்பர் 2018 திங்கட்கிழமை சரியாக 10 மணி அளவில் மாநாட்டுத் திடலான புஸ்தானே அஹ்மதில் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அனுமதியுடன் மதிப்பிற்குரிய ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் சத்ர், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் அவர்களின் தலைமையில் ஹுஸூர் அவர்களின் பிரதிநிதி என்ற நிலையில் பணியாளர்கள் தொடர்பான ஆய்வின் கூட்டம் ஆரம்பமானது.

நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர் குலிஸ்தான் அஹ்மது சூரா பக்கராவின் கடைசி மூன்று வசனங்களை ஓதி அதன் பொருளையும் எடுத்துக் கூறினார். இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்களின் பிரதிநிதி உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் அங்கு ஒன்று கூடியிருந்த அனைத்து பணியாளர்களுக்கும், தொண்டாற்றக் கூடியவர்களுக்கும் காதியான் ஆண்டு மாநாடு 2018–ற்கான வாழ்த்துக்களை கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தோம்பல் தொடர்பாக சுவாரஷ்யமான சம்பவங்களை எடுத்துக் கூறி பணியாளர்களுக்கு அறிவுரை கூறினார்கள். மேலும் ஹுஸூர் அவர்களின் சொற்களில் அனைத்துப் பணியாளர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் அறிவுரை செய்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்:

எவருக்கு விருந்தோம்பல் செய்யும் பணி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த விருந்தினர்கள் அல்லாஹ்விற்காக இங்கு ஒன்று கூடியுள்ளனர். மேலும் அவர்கள் அல்லாஹ்வின் மார்க்க விஷயத்தைக் கேட்பதற்கு இங்கு ஒன்று கூடியுள்ளனர். இறைவனது மஸீஹ் அழைத்ததன் பெயரில் இங்கு ஒன்று கூடியுள்ளனர். மேலும் வருடத்தில் ஒரு முறை ஒன்று கூடி தமது ஆன்மீகத்தை சிறந்ததாக ஆக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அழைத்தார்கள். ஏதாவதொரு விருந்தினரின் இயல்பு கடினமாக இருந்து அவரது நாவிலிருந்து கடுமையான வார்த்தைகள் வெளி வந்தாலோ அல்லது கடுமையான சொற்களை அவர் பயன்படுத்தினாலோ பணியாளர்கள் எப்போதும் கண்டும் காணாமல் பணி செய்ய வேண்டும். கண்டும் காணாமல் பணி செய்தவாறு இந்த விஷயங்களை தவறாகக் கருதக் கூடாது. ஏனென்றால் இதனால் மேலும் தீய விளைவுகள் உருவாகி விடுகின்றன.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

قُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا மக்களிடம் மென்மையாக பேசுங்கள். (2:84)

அல்லாஹ் நம்மிடம் கூறிய இந்த விஷயங்கள் நல்லொழுக்கத்தை நிலைநிறுத்துவதற்குரிய இரகசியமாகும்.... பொதுவாக இந்த கட்டளை இருக்கும்போது இன்றைய நாட்களில் இந்த கட்டளையை மிகவும் அதிகமாக பேணி நடக்க வேண்டும்.

எனவே பணியாளர்கள், எப்போதும் உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். எங்கு இந்த நல்ல நல்லொழுக்கங்களின் மூலமாக அவர்கள் விருந்தினர்களின் உரிமையை செலுத்தியவாறு நற்கூலியை பெறக் கூடியவர்களாக இருப்பார்களோ, மேலும் அதன் விளைவாக அவர்களது ஈமானிலும் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்குமோ அங்கு அவர்கள் மற்றவர்களது தவறான செயல்களின் காரணமாக எதிர் நடவடிக்கையை காட்டாமல் அவர்களுக்கு அஹ்மதி சுற்றுச் சூழலானது மென்மை, அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் சூழலாகும் என்ற உணர்வை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருப்பர்.

எனவே நன்மைகளை சம்பாதிக்கவும், சிறந்தவற்றை சேரிப்பதற்கான சந்தர்ப்பம் இதுவாகும். அது ஒரு வருடத்திற்குப் பிறகு நமக்கு கிடைத்துள்ளது. மேலும் குறிப்பாக பணியாளர்கள் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். விருந்தினர்களுடன், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களின் கடுமையான சொல்லை கண்டும் காணாமல் விட்டு விடுவதும் மேலும் தம்மை கட்டுப்படுத்திக் கொள்வதும் சிறந்த நல்லொழுக்கமாகும். இந்த விஷயங்கள் நிச்சயமாக உங்களை நன்மை மற்றும் அருட்களினால் நிரப்பி விடும். மாறாக எண்ணற்ற அருட்களையும், நன்மைகளையும் இதற்கு பதிலாக அல்லாஹ் வழங்குவான்.

விருந்தினர்களின் உணர்வுகளை கருத்தில் கொண்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

விருந்தினர்களின் உள்ளம் கண்ணாடியைப் போன்று மிருதுவானதாக இருக்கின்றது. சிறிதளவு கடினத்தினால் அது உடைந்து விடுகின்றது. ஆக, ஒன்று விருந்தினர்களுடன் கடினம் காட்டக் கூடாது. மற்றொன்று, விருந்தினர்களிடம் ஏதாவது பலவீனம் காணப்பட்டாலும், அவர் உங்களது உயர்ந்த நல்லொழுக்கத்தைப் பார்த்து தமது நிலைமைகளை மாற்றுவதற்கு முயற்சி செய்வார். இவ்வாறு நீங்கள் ஒருவரது சீர்திருத்தத்திற்கு காரணமாக அமைந்து விடுவீர்கள்.

இறுதியில் ஹுஸூர் அவர்களின் பிரதிநிதி ஹுஸூர் அவர்களின் துஆக்கள் அடங்கிய சொற்களிலேயே தமது உரையை நிறைவு செய்தார்கள். ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்றைய நாட்களில் வரக் கூடியவர்களிடம், அவர்கள் துஆக்களில் நேரத்தை கழிக்க வேண்டும் என்று நான் அறிவுரை செய்கின்றேனோ அதேபோன்று பணியாளர்களும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் எப்போதும் நமக்கு உதவி செய்து வருகின்ற அந்த இறைவனை ஒருபோதும் மறக்கக் கூடாது. மேலதிகாரிகளும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் மேலதிகாரி என்ற ரீதியில் சமுதாயத்திற்கு தொண்டு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தமது பணி தொடர்பான ஆய்வை செய்கின்ற அதே வேளையில் தர்பிய்யத் தொடர்பாக தமது பணியாளர்களையும் ஆய்வு செய்ய வேண்டும்.

மேலும் விருந்தினர்களுக்கு எல்லா விதமான இலகுவையும் ஏற்படுத்தித் தர எல்லா நேரமும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் துஆக்களில் அழுத்தம் கொடுத்தவாறு தமது பணியை நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

(குத்பா ஜுமுஆ 21 ஜூலை 2006)

இறுதியாக ஹுஸூர் அவர்களின் பிரதிநிதி பல்வேறு துறைகளைச் சார்ந்த நாஸிம்கள் மற்றும் விருந்தோம்பல் செய்பவர்களுடன் முஸாஃபா செய்தார்கள். இவ்வாறு இந்த பணியாளர்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நிறைவுற்றது. அல்ஹம்துலில்லாஹ்.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 07 February 2019 Issue No. 6

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கூறுவதிலிருந்து தடுக்கவில்லை. நாகரீகமான முறையில் பதில் கூற வேண்டும். தேவையில்லாத விஷயங்களைப் பேசுவதும், வீணான சண்டைகள் ஏற்படுவதற்குமுரிய பெயர் ஹிக்மத் அல்ல. ஒருபோதும் உண்மையை மறைக்கக் கூடாது. ஆமாம் போடுவதினால் மனிதன் காஃபிராகி விடுகின்றான். அல்லாஹ்விடம் வெட்கத்தை வெளிப்படுத்த வேண்டும். நமது மார்க்கத்தில் எந்தவொரு கூற்றும் நாகரீகத்திற்கு எதிரானது கிடையாது.

### இஸ்லாம் அநீதிக்குள்ளாகி இருக்கின்றது

இஸ்லாம் தொடர்ச்சியாக அநீதிக்குள்ளாகியே வந்துள்ளது. இரண்டு சகோதர்களுக்கிடையே சண்டைகள் ஏற்பட்டால் மூத்த சகோதரன் தமது மகத்துவம் மற்றும் முதலில் பிறந்ததனால் தமது சிறிய சகோதரன் மீது தேவையில்லாமல் அநீதி இழைக்கின்றான். ஏனென்றால், அவன் முதலில் பிறந்ததினால் தனக்கு உரிமை அதிகமாக இருப்பதாக கருதுகின்றான். ஆனால் இருவருக்குமுரிய உரிமை சமமானதே. இதேபோன்ற அநீதியே இஸ்லாத்தின் மீதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா மார்க்கத்திற்குப் பிறகு இஸ்லாம் வந்தது. இஸ்லாம் எல்லா மார்க்கத்திலும் உள்ள தவறுகளை அவர்களுக்கு எடுத்துக் கூறியது.

முட்டாள் நன்மைக்கு எதிரியாகி விடுவதைப்போல் எல்லா மார்க்கங்களும் இதன் மீது கோபமடைந்தது. ஏனென்றால் அவர்களது உள்ளங்களில் தத்தமது மகத்துவங்கள் குடிபெயர்ந்திருந்தன. மனிதன் அதிகமான எண்ணிக்கையைக் கொண்ட பெரிய சமுதாயமாகவும், பழமையான சமுதாயத்தைச் சேர்ந்தவனாகவும்,அதிகமான செல்வங்களை கொண்டிருப்பதனாலும் ஆணவம் கொண்டவனாக ஆகி விடுகின்றான். பெருமானார் (ஸல்) அவர்கள் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட ஒரு ஏழை மற்றும் புதிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே (ஆரம்பத்தில்) அவர்களை (எதிரிகள்) ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மை எப்போதும் அநீதிக்குள்ளாகவே செய்கின்றது.

### இஸ்லாம் மற்ற சமுதாயங்களின் மீது கருணை காட்டக் கூடியதாக இருக்கின்றது

இஸ்லாம் எத்தகைய தூய்மையான மார்க்கமாக இருக்கின்றதென்றால், அது எந்தவொரு மார்க்கத்தின் தோற்றுநர்களையும் பற்றி தீயதாக கூற விடுவதில்லை. மற்ற மார்க்கத்தைச் சார்ந்தவர்கள் உடனே ஏசிப் பேசுவதற்கு ஆயத்தமாகி விடுகின்றனர். பாருங்கள்! இந்த கிறிஸ்தவ சமுதாயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எந்த அளவுக்கு ஏசிப் பேசுகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் தற்போது உயிரோடிருந்தால் அன்னாருக்கு உலகத்தில் இருக்கின்ற மகத்துவத்தின் மீதான எண்ணத்தினால் இந்த மக்கள் எந்தவொரு சொல்லையும் நாவில் கொண்டு வர இயலாதவர்களாக இருந்திருப்பார்கள். மாறாக, ஆயிரக்கணக்கான மடங்கு கண்ணியத்துடன் நடந்து கொண்டிருப்பார்கள்.

காபுலின் அமீரும், ரோமானிய நாட்டின் அரசரும் பெருமானார் (ஸல்) அவர்களது உம்மத்தைச் சார்ந்த சாதாரண நபராவார்கள். இவர்களை அவர்களால் ஏசிப்பேச முடியாது. அவமரியாதையுடன் நடந்து கொள்ள முடியாது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரை எடுத்தாலே அவர்கள் ஆயிரக்கணக்கான ஏச்சுச் பேச்சுக்களை கூறுகின்றனர். இஸ்லாம் மற்ற மார்க்கங்களின் மீது கருணை காட்டக்கூடியதாக இருக்கின்றது. அது அனைத்து நபிமார்கள் மற்றும் வேதங்களின் மீதுள்ள குற்றச்சாட்டை தவறு என்று நிரூபித்துள்ளது. ஆனால் இஸ்லாமே அநீதிக்குள்ளாகி இருக்கின்றது. இஸ்லாத்தின் கருத்து لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பதாகும். இது மற்ற எந்தவொரு மார்க்கத்திலும் கிடையாது.

(மல்பூஸாத் தொகுதி **1** பக்கம் **3–5**)

### அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இரவில் எழுங்கள். அல்லாஹ் தஆலா உங்களுக்கு தனது வழிகாட்டலை வழங்க துஆ செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களும் கூட படிப்படியாகத்தான் சீர்திருத்தத்தை பெற்றார்கள். முதலில் அவர்கள் எப்படி இருந்தார்கள்?

ஒரு விவசாயி விதைத்த விதைகள் போன்று இருந்தார்கள். பின்னர் அன்னார் தான் நீர் பாய்ச்சினார்கள். ஆவர்கள் தமது தோழர்களுக்காக துஆ செய்தார்கள். விதை சரியாக இருந்தது. அது விதைக்கப்பட்ட நிலமும் சிறந்ததாக இருந்தது. அதனால் அந்த நீர்ப்பாச்சலின் விளைவாக நல்ல கனிகள் வெளிவந்தன.....

நீங்களும் உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்யுங்கள். தஹஜ்ஜுத் தொழ எழுங்கள். துஆ செய்யுங்கள். உள்ளத்தை சீர்திருத்துங்கள். பலவீனங்களை விட்டு விடுங்கள். மேலும் இறைவனது திருப்திக்கேற்ப உங்களது சொல்லையும் செயலையும் அமைத்துக் கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி **1** பக்கம் **28** புதிய பதிப்பு)

### *நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

### திருக்குர்ஆனிலிருந்து....

இறைச்சட்டத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டவர்களைப் பற்றி உமக்குத் தெரியாதா? அவர்களுக்கிடையே தீர்ப்பளிப்பதற்காக அல்லாஹ்வின் வேதத்தின்பால் அவர்கள் அழைக்கப்படுகின்றனர். அவர்களுள் ஒரு பிரிவினர் புறக்கணித்து முகந்திருப்பிக் கொள்கின்றனர். **(3:24)**

**ஃபைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad